**ST. ANDREW'S JUNIOR COLLEGE**

**Preliminary Examination 2022**

**Tamil Language and Literature**

**1Hr. 15 Min**

**PAPER 1**

**9577/1**

**31 August 2022**

குறிப்புகள்

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர் விடைப் புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும் பதிவு எண்ணையும் தெளிவாகவும் சரியாகவும் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப் புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து எடுத்துச் செல்லக்கூடாது.



More papers at www.testpapersfree.com

## உயர்தரம் 2

## தமிழ் மொழி, இலக்கியம்

**பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினைப்பற்றி ஏறத்தாழ 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக (35 மதிப்பெண்கள்)**

Q1 இன்றைய இளையர்கள் தோல்வியைக் கண்டு அஞ்சுகிறார்கள்- விவாதிக்க.

Q2 உன் நண்பன் ஒருவன் அண்மையில் சமூகவலைத்தளத்தைப் பயன்படுத்தி உன்னைப்பற்றி ஒரு தவறான செய்தியைப் பரப்பினான். விளையாட்டாக அவன் செய்த செயல் உன்னை எப்படிப் பாதித்தது என்பதைப்பற்றியும் அதிலிருந்து மீண்டுவர நீ மேற்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றியும் விளக்கி எழுதுக.

Q3 வாழ்க்கையில் முன்னேற ஒருவர் எத்தகைய நற்பண்புகளை உடையவராக இருக்க வேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாய்? - கருத்துரைக்க.

Q4 பின்வரும் சூழலை மையமாகக்கொண்டு ஒரு கட்டுரை வரைக.







More papers at www.testpapersfree.com

முற்றும்



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

**ST. ANDREW'S JUNIOR COLLEGE**

**Prelim examination - 2022**

**Tamil Language and Literature**

**1 Hour 45 minutes**

**PAPER 2 (E –Exam)**

**9577/02**

**31 August 2022**

குறிப்புகள்

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 இவ்வினாத்தாளில் இரண்டு பிரிவுகள் உள்ளன.

3 'அ' பிரிவில் ஒரு பனுவலும் அதனையொட்டி ஐந்து வினாக்களும் இடம்பெற்றுள்ளன. 'ஆ' பிரிவில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் இடம் பெற்றுள்ளன. இவ்விரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து இவற்றையொட்டி அமைந்த வினாக்கள் அனைத்திற்கும் சொந்த நடையில் விடையெழுத வேண்டும்.



More papers at www.testpapersfree.com

‘அ’ பிரிவு

**சுயவிடைக்கருத்தறிதல் 1** **(32 மதிப்பெண்கள்)**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனையொட்டி அமைந்த வினாக்களுக்கு சொந்த நடையில் விடை எழுதுக.

மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிர்களும் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. உடலில் சக்தி உருவாகவும் செல்கள் வளர்ச்சியடையவும் உடல் உறுப்புகள் ஆரோக்கியமாகச் செயல்படவும் உணவே அடிப்படையாகும். குறிப்பாக உணவு இல்லையேல் உடல் <u>நலிவுடைந்து</u> போகும். மனிதனின் ஆற்றலுக்கும் சிந்தனைத் திறனுக்கும் உணவே காரணமாகிறது. நோய்நொடியின்றி நீண்ட காலம் வாழ ஆரோக்கியம் நிறைந்த உணவுகள் அவசியமாகும். நோய் எதிர்ப்பு சக்தியை நமக்கு வழங்கும் உணவு வகைகளைக் கண்டறிந்து உண்ணுவதன் மூலம் புதிதுபுதிதாக நம்மைத் தொற்றும் நோய்களிலிருந்து விடுபடலாம்.

இன்று நாகரிகம் என்ற பெயரில் உடலுக்கு <u>ஒத்துவராத</u> துரித உணவுகளின் பக்கம் சார்ந்து இயற்கை உணவை மறந்துவிட்டோம். மனிதன் தனது ஆரோக்கியத்திற்குத் தேவையான சரிவிகித உணவுகளைச் சாப்பிடாமல் ருசியை மட்டுமே மையப்படுத்தி அதற்கேற்ப உணவுகளைத் தேர்ந்தெடுத்து உண்ணுவதால் நோயாளியாகிறான். உணவு முறைகளை மாற்றி அமைத்துக் கொண்டால் மீண்டும் ஆரோக்கியத்தைப் பெற வாய்ப்பாகும். இயற்கையான உணவு முறைகளையும் இயற்கையோடு இயைந்த பழக்க வழக்கங்களையும் கடைப்பிடிப்பதன் மூலம் உடல் ஆரோக்கியம் மட்டுமின்றி மன நலத்தையும் பேணிக் காக்கலாம் என்பதே இன்றைய மருத்துவத் துறையின் பரிந்துரையாகும். மேலும், இயற்கைப் பாரம்பரிய உணவு வகைகள் அதிக அளவு ஊட்டச் சத்து நிறைந்தவையாக உள்ளன. இயற்கை உணவின் மூலம் <u>மானுட</u> சமூகமே நலத்துடன் இயங்க வழி கிட்டுகிறது.

நம் அனுபவத்தின்படியும் அறிவியல் கருத்துகளின்படியும் உணவை மருந்தாக மாற்றிக் கொள்கிறோம். மருந்து என்பது ஒரு நோயைக் குணப்படுத்துவதுடன் மீண்டும் வராது காக்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அதை உட்கொள்ளும்போது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தாத வகையிலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளும்படியானதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் அதை உரிய மருத்துவரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே உட்கொள்ள வேண்டும். இவை எல்லாம் மருந்தின் இலக்கணமாகும். ஆனால்,



More papers at www.testpapersfree.com

இன்று நாம் உட்கொள்ளும் மருந்துகள் பல இத்தகைய வரம்பிற்குள் வருவதில்லை. இன்றைய அறிவியல் முன்னேற்றம் நோய்களைப்பற்றி ஆழ்ந்து ஆராய்வதுடன் அதற்குரிய எதிர்ப்பு மருந்துகளைத் தருவதிலும் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளது. இதனை நாம் மருத்துவப் புரட்சி என்றே சொல்லலாம். ஆனால் அதே சமயத்தில் புதுப்புது நோய்களும் தோன்றி மனித குலத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதும் கண்கூடாகக் காணமுடிகிறது. அத்துடன் இதனைக் கட்டுப்படுத்த மருத்துவ ஆராய்ச்சியின் மூலம் புதுப்புது மருந்து வகைகளும் நாளுக்கு நாள் அறிமுகமாவதையும் நாம் காண்கிறோம்.

நம் முன்னோர்கள் நோய் வருவதற்கு முன்பே தன்னைக் காத்துக்கொள்வதுபற்றியும் வந்தபின் கடைபிடிக்க வேண்டிய மருத்துவ வழிவகைகளைப்பற்றியும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டுணர்ந்து எழுதி வைத்துள்ளனர். அதை நாம் முறையாகக் கடைபிடிக்கவும் புரிந்துகொண்டு செயல்படுத்தவும் தவறிவிட்டோம். அதனால்தான் நமது ஆரோக்கியத்தில் நாம் பின்னடைவைச் சந்தித்து வருகிறோம். 'நொறுங்கத் தின்றால் நூறு வயது' என்றனர் முன்னோர். இன்றோ சாப்பிட நேரமில்லாமல் நின்றபடியே விழுங்கிவிட்டு ஓடுகிறோம். பொதுவாக உணவை நன்றாக மென்று விழுங்க வேண்டும். இதனால் மாவுப் பொருட்கள் செரிமானமாவதற்கு ஏதுவாக உமிழ் நீர் சுரந்து உணவுடன் உட்செல்லும். மனதில் எந்த ஒரு சஞ்சலங்களுக்கும் இடம்கொடுக்காது நிதானமாகச் சாப்பிடும்போது உணவு உடலுக்கு சக்தி தரும் அமுதமாகிறது.

அக்காலத்தில் மக்கள் வியர்வை நன்றாக வெளியேறும்படி உடல் உழைப்பைத் தந்தனர். எங்கும் நடந்து செல்வதையே வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர். இயற்கையாகக் கிடைக்கும் காய் கனி கிழங்கு வகைகளையே அதிகம் உண்டனர். அத்துடன் மக்களின் சிந்தனைப்போக்கும் நேர் வழியாகவே விளங்கியது. மக்கள் இறை அச்சம் காரணமாகத் தவறான வழியில் செல்ல அஞ்சினர். இதனால் உடல்நலம் மட்டுமின்றி மனநலமும் மேம்பட்டு நீண்ட ஆயுளையும் நிம்மதியான வாழ்க்கை முறையையும் பெற்று வாழ்ந்தனர்.

வினாக்கள்

Q1 'உணவே உடல் ஆரோக்கியத்தின் அடிப்படை'- ஏன்? (4 மதிப்பெண்கள்)

Q2 இன்றைய மருத்துவத் துறையின் பரிந்துரையாகக் கட்டுரை சுட்டுவன யாவை? அத்தகைய பரிந்துரையைப் பின்பற்றுவதால் நாம் எப்படிப்பட்ட பலன்களை அடையலாம்?



More papers at www.testpapersfree.com

(7 மதிப்பெண்கள்)

Q3 மருந்து எத்தகைய தன்மை வாய்ந்தவையாக இருக்க வேண்டும்? அப்படி இல்லாவிட்டால் எத்தகைய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்? (7 மதிப்பெண்கள்)

Q4 உடலுக்கு உணவே அமுதமாவது எப்போது? (6 மதிப்பெண்கள்)

**Q5** சொற்பொருள்

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக. (8 மதிப்பெண்கள்)

அ நலிவடைந்து

ஆ ஒத்துவராத

இ மானுட

ஈ வரம்பிற்குள்

'ஆ' பிரிவு

சுயவிடைக் கருத்தறிதல் 2 (33 மதிப்பெண்கள்)

<u>பனுவல் 1</u> 'கைபேசியில் கவனம்' எழுத்தாளர் கோபாலன்

இன்றைய இளையர்களின் சக்தி நமக்கு வியப்பூட்டுகிறது. எனினும் கைபேசி மூலம் சமூக ஊடகங்களைக் கையாளும் இளைஞர்களில் கணிசமானோர் அதற்கு அடிமையாகிவிட்டனர் என்றே தெரிகிறது. அறிவியலின் வளர்ச்சி அதிவேகமாக இருக்கிறது. புதுப்புது தொழில் நுட்பங்களில் 'ஆண்ட்ராய்டு' அலைபேசிகள் நம்மைக் கவர்ந்திழுக்கின்றன. சொல்லப்போனால், கைபேசி இல்லாத நபரே இல்லை என்றே கூறலாம். ஆறாம் விரல் என்று சொல்லத்தக்க வகையில் முக்கியத்துவம் பெறும் கைபேசி, அறிவியல் வளர்ச்சியால் கிட்டிய அற்புதக் கொடை என்ற கருத்தில் நாம் மாறுபடப் போவதில்லை. ஆனால், இதன் அளவுக்கதிகமான பயன்பாடு ஆரோக்கியமானதா? கைபேசி பயன்படுத்துபவர்களில் பெரும்பாலானோர் இந்த உலகில் வாழவில்லை; அவர்களின் உலகமே கைபேசியாகிவிட்டது. அதிலேயே அவர்கள்



More papers at www.testpapersfree.com

வசிக்கிறார்கள். வாழ்வதற்கும் வசிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது அல்லவா?

இன்று குழந்தைகள்கூடக் கைபேசியில் முடங்கிக் கிடக்கிறார்கள். மரத்தடியில், மைதானத்தில் ஓடி ஆடுகிற குழந்தைகளைப் பார்ப்பது அரிதாகிவிட்டது. நமது குழந்தைகள் கைபேசியைப் பயன்படுத்தும்போது ஏற்படும் பாதிப்புகளை நாம் அறிவதில்லை. அதனால் உடல், மனம் இரண்டுமே பாதிக்கின்றன. குழந்தைகள் நான்கு பேருடன் அக்கம் பக்கத்தில் பேசித் திரிந்தால்தான் பேச்சு நன்றாக வரும். கைபேசியில் முடங்கிக்கிடந்தால் பேச்சு எப்படி வரும்? கைபேசியிலேயே நேரத்தைச் செலவிடும் குழந்தைகள், மற்ற குழந்தைகளுடன் ஒன்றிணைய இயலாது சிரமப்படுவர். மேலும், சமூக மைய நீரோட்டத்தில் இருந்து விடுபட்டு தனிமைப்பட நேரிடலாம். இதன் தொடர்ச்சியாக மனச்சிதைவு ஏற்படும் வாய்ப்பும் உண்டு. நாம் பயன்படுத்தும் கைபேசியின் அலைவீச்சு, எவ்வளவு நேரம், எவ்வளவு தொலைவில் வைத்துப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொருத்து மேற்கண்ட பாதிப்புகள் ஏற்படலாம்.

<u>பனுவல் 2</u> 'பயனறிந்து பயன்படுத்துவோம்' எழுத்தாளர் நெல்சன்

அலைபேசிகளை முறையாகப் பயன்படுத்தினால், அது நம்மை முன்னேற்றும்; வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்; தவறாகப் பயன்படுத்தினால் சிறைக்கூடத்தின் உள்ளே கொண்டுபோய்ப் பூட்டிவிடும். அன்றாடம் நாளிதழ்களில் நாம் படிக்கின்ற செய்திகள் அதை உணர்த்துகின்றன.

அலைபேசிகளால் கிடைக்கின்ற நன்மைகள் அதிகம். தீமை என்று சொன்னால் அதுவும் அதிகம்தான். நம் கண்முன்னேயே சிட்டுக்குருவிகள் காணாமல் மறைந்து போனதற்கு, அலைபேசி கோபுரங்களின் மின்காந்த அலைவீச்சுதான் காரணம் என்று ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. நமது உடல்நலத்திற்கும், மனநலத்திற்கும் அலைபேசிகள் ஏற்படுத்துகின்ற கேடுகள் கொஞ்ச நஞ்சம் அல்ல.



More papers at www.testpapersfree.com

எனவே, அலைபேசிகளை முறையாகப் பயன்படுத்த அறிதல் வேண்டும். முதலில் கைபேசியை எப்போதும் கைகளிலேயே வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. அவை, மின்காந்த அலைகளை நம்மை நோக்கி ஈர்க்கச் செய்கின்றன. அது மின்காந்த அதிர்வுகளை ஏற்படுத்தலாம். எனவே, சுருக்கமாக உரையாடுவதும், 'என்ன? ஏது?' என்று கேட்டு, உரையாடலை முடித்துக் கொள்வதும் நல்ல பழக்கமாகும். மேலும், தேவையற்ற வீண் பேச்சு வினையாகி விடும். இந்தக் கையடக்க ஆபத்தில் இருந்து எப்படி விடுபடுவது? முதல் வேலையாக நம் கைபேசியின் இணைய இணைப்பை தேவையற்றபோது நிறுத்தி வைக்கவேண்டும். மின்னஞ்சல் பார்ப்பது, இணையத்தில் தகவல் அறிவது என்று தேவையான நேரத்தில் மட்டும் பயன்படுத்த வேண்டும். கைபேசி மட்டுமே வாழ்க்கை அல்ல; அதற்கு வெளியே எவ்வளவோ இருக்கிறது. நமது கடமைகள், பொறுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாமே. பேசுவதற்கும், பல விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கும் அவ்வப்போது செல்போன்களைப் பயன்படுத்திக் கொள்வதில் தவறே இல்லை. கால வரைமுறை இல்லாமல் செல்போன்களைப் பயன்படுத்தத் துடிப்பதுதான் தவறு. 'வேறு வேலை செய்துகொண்டிருந்தாலும், செல்போன் அழைப்பு மணிக்காகவோ, வாட்ஸ்அப் போன்ற செயலிகளின் ஒலிகளுக்காகவோ பெரும்பாலோரின் மனம் ஏங்குகிறது' என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அழைப்பு ஒலிகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் வரவில்லையெனில், உடலுக்குள் பதற்றமான சூழ்நிலை உருவாவதாகக் கூறப்படுகிறது. செல்போன்களைப் பயன்படுத்தாமல் இருக்க முடியாது. ஆனால், செல்போன்களை அதிகமாகப் பயன்படுத்துவதைத் தாராளமாகத் தவிர்க்க முடியும்.

வினாக்கள்

Q6 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (6 மதிப்பெண்கள்)

"ஆறாம் விரல் என்று சொல்லத்தக்க வகையில் முக்கியத்துவம் பெறும் கைபேசி, அறிவியல் வளர்ச்சியால்



More papers at www.testpapersfree.com

கிட்டிய அற்புதக் கொடை என்ற கருத்தில் நாம் மாறுபடப்போவதில்லை."

அ சினைப் பெயர்

ஆ மூன்றாம் வேற்றுமை உருபேற்றசொல்

இ தன்மைப் பன்மைப் பெயர்

Q7 'வாழ்வதற்கும் வசிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது' - என்று எழுத்தாளர் திரு. கோபாலன் குறிப்பிடுவதேன்? (5 மதிப்பெண்கள்)

Q8 கைபேசியின் பயன்பாடு குறித்து இரண்டு பனுவல்களும் கூறும் கருத்தை ஒப்பிட்டுக் கூறுக (7 மதிப்பெண்கள்)

Q9 கையடக்கத் தொலைபேசியினால் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கப் பனுவல் இரண்டு கூறும் கருத்துகள் உனக்கு ஏற்புடையதுதானா? பனுவல் இரண்டை அடிப்படையாகக்கொண்டு உன் கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் 140 சொற்களுக்கு மிகாமல் எழுதுக. (15 மதிப்பெண்கள்)

முற்றும்



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

# ST. ANDREW'S JUNIOR COLLEGE

**Preliminary Examination 2022**

**Tamil Language and Literature**

**3 HOURS**

**PAPER 3 9577/3**

**16 Sep 2022**

குறிப்புகள்

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர் விடைப் புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும் பதிவு எண்ணையும் தெளிவாகவும் சரியாகவும் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப் புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து எடுத்துச் செல்லக்கூடாது.



More papers at www.testpapersfree.com

முக்கியக் குறிப்பு – ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடை எழுத வேண்டும். மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

'அ' பிரிவு

<u>நாவல், சிறுகதை</u>

**Q1** 'ஒண்ணு என் வார்த்தையை நம்புங்க அல்லது இப்ப விழுந்து கதறும் கண்ணீரையாவது நம்புங்க. நான் மனசறிஞ்சி உங்களுக்குத் துரோகம் செய்ய மாட்டேன்' - மாதவி முத்துக்குமரனிடம் இப்படிச் சொல்ல நேர்ந்தமைக்கான காரணத்தை விளக்குவதுடன் இக்கூற்றிற்கேற்ப மாதவியின் நடவடிக்கைகள் அமைந்தனவா என்பதையும் விளக்கி எழுதுக. (25 மதிப்பெண்கள்)

**Q2** 'தேடல்' என்ற தமது சிறுகதையின்வழி எழுத்தாளர் நா கோவிந்தசாமி உணர்த்த விரும்பும் கருத்துகள் நம் சமுதாய மேம்பாட்டிற்கு எந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைகின்றன – ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

'ஆ' பிரிவு

<u>கவிதை</u>

**Q3** 'ஆட்டனத்தி ஆதிமந்தி' கவிதைக் காவியத்தில் ஆதிமந்தியைவிட மருதியே முக்கியத்துவம் வாய்ந்தவளாகத் திகழ்கிறாள்' என்று கூறும் உன் நண்பருக்கு உன் பதில் என்னவாக இருக்கும்? (25 மதிப்பெண்கள்)

**Q4** மனிதன் தன் வாழ்வினை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும்? 'கல்லின் காயம்' என்னும் கவிதையினை மையமாகக் கொண்டு விளக்குக. (25 மதிப்பெண்கள்)

'இ' பிரிவு

<u>நாடகம்</u>

**Q5** "இவ்வளவு சாதாரணமா மனசை மாத்திக்கிற நீ, என் மனசிலே ஒரு நம்பிக்கையை, ஆசையை வளர்த்திருக்க வேண்டாம்"- சிங்கப்பூர் மாப்பிள்ளை நாடகத்தில் இடம்பெறும் சுந்தரலிங்கத்தின்



More papers at www.testpapersfree.com

இக்கூற்றினை மையமாகக் கொண்டு செல்வியின் செயல்பாட்டை ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

**Q6** இளமையிலேயே முதுமைக்காலத்திற்காகத் திட்டமிடவேண்டும் என்னும் கருத்தை வாசகர்களிடம் உணர்வுப்பூர்வமாக 'ஊஞ்சல்' நாடகம் எவ்வாறு முன்வைக்கிறது?

(25 மதிப்பெண்கள்)

'ஈ' பிரிவு

இலக்கியத் திறனாய்வு

**Q7** பின்னிணைப்பு 1இல் கொடுக்கப்பட்டுள்ள 'பேராசை' என்னும் தலைப்பிலான சிறுகதையைப் படித்துத் திறனாய்வு நோக்கில் கதைக்கரு, பாத்திரப் படைப்பு, கதாசிரியர் உணர்த்த விரும்பும் கருத்துகள் ஆகியவற்றை விளக்கி எழுதுக.

(25 மதிப்பெண்கள்)

**Q8** பின்னிணைப்பு 2ல் கொடுக்கப்பட்டுள்ள 'இயற்கை' என்னும் தலைப்பிலான கவிதையைப் படித்து அதன் நயத்தை விளக்கி எழுதுக. கவிதையின் பாடுபொருள், பொருள் நயம், சொல்நயம் ஆகிய கூறுகளையொட்டி விடை அமைதல் வேண்டும்.

(25 மதிப்பெண்கள்)



More papers at www.testpapersfree.com

# முற்றும்

<u>பின்னிணைப்பு 1 - பேராசை</u>

கலைந்த தனது தலைமுடியை சரி செய்து கொண்டே அலுவலகத்தை அடைந்தான் ராஜேஷ். அலுவலகத்தில் நுழைந்து தனது இருக்கையில் அமர்ந்தான். அப்போது, "என்னடா ராஜேஷ் இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டாய்" என்று கேட்டான் திவாகர். "நேற்று மாலை எனக்கு ஒரே தலைவலியாக இருந்தது. சீக்கிரம் சென்றுவிட்டேன். நேற்றைய வேலையை முடிக்காமலே சென்றதால் இன்று சீக்கிரம் வர வேண்டியதாகி விட்டது. அதனால்தான் சீக்கிரம் வந்து வேலையைத் தொடங்கினேன்" என்றான். "ஆமாம், நீ எனக்கு முன்பே வந்திருக்கிறாயே ஏன்?" என்று கேட்டான். அதற்கு திவாகர், "அது ஒன்றுமில்லை எனது வீட்டில் யாரும் இல்லை, ஊருக்குச் சென்றுவிட்டனர். ஆகவே, சீக்கிரம் வந்து விட்டேன்" என்றான். இருந்தாலும் அவன் பதிலை முழுமையாகக் கேட்காமல் தனது வேலையில் மூழ்கினான் ராஜேஷ். ஆனால் தனது ஓரக்கண்ணால் அடிக்கடி திவாகரை கவனிக்கத் தவறவில்லை.

சற்று நேரத்தில் அலுவலகம் பரபரப்பானது. அது ஓர் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்தின் நிர்வாக அலுவலகம். ராஜேஷ் அதில் எட்டு வருடங்களாகப் பணி புரிகிறான். ஆனால் அவனுள் ஒரு வருத்தம் இருக்கவே செய்தது. தனக்குச் சரியான அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று. வேலை செய்வதற்கு ஏற்ப பதவி உயர்வு, ஊதிய உயர்வு ஆகிய வாய்ப்புகள் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் அவனுக்கு உண்டு.

மேனேஜர் சிறிது தாமதாக வந்தாலும் உடனே ராஜேஷை அழைத்தார். நல்லவேளை வேலையை முடித்துவிட்டேன் என்று மனதிற்குள் கூறிக் கொண்டே அவரது அறையை நோக்கி விரைந்தான் ராஜேஷ். "நேற்றைய வேலையை முடித்துவிட்டேன் சார், முழு விவரங்களையும் எனது குறிப்புகளையும் இதனுடன் இணைத்துள்ளேன்" என்று கூறிவிட்டு அவரிடம் வழங்கினான் ராஜேஷ். அவரும் அதைப் படித்துக் கொண்டே, உட்காருங்கள் ராஜேஷ், உங்களிடம் பேச வேண்டும் என்றார்.

"ராஜேஷ், இரண்டு நாட்களுக்கு முன்னர் நமது நிறுவன இயக்குனர் ஒரு செய்தியை என்னிடம் தெரிவித்தார். நமக்கு வர வேண்டிய மூன்று 'ஆர்டர்கள்' வேறு கம்பெனிக்குச் சென்று விட்டன என்றும், நாம்



More papers at www.testpapersfree.com

குறிப்பிட்ட தொகையைவிடச் சற்றே குறைவான தொகையை அவர்கள் குறிப்பிட்டிருந்ததால் நமக்குக் கிடைக்காமல் போனது என்றும் வருத்தமாகக் கூறியிருந்தார். நாம் குறிப்பிட்டதே மிகக் குறைவு. பின்பு எப்படி அவர்களுக்குச் சாதகமாகச் சென்றிருக்கும் என்று சந்தேகம் தோன்றியிருக்கிறது. ஆகவே, இதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று என்னிடம் கூறியதும் எனக்கும் அந்தச் சந்தேகம் எழுந்தது. அந்த அடிப்படையில்தான் இந்த வேலையை உங்களிடம் கொடுத்தேன். நீங்கள் அளித்திருக்கும் இந்த அனைத்து குறிப்புகளும் அதை உறுதிப்படுத்திவிட்டன. சபாஷ் ராஜேஷ்!" என்றார். உடனடியாக அவன் குறுக்கிட்டு, "சார் எனக்குத் திவாகர் மேல் ஒரு சந்தேகம் வந்திருக்கிறது. கடந்த ஒரு மாதமாக அவன் தினமும் அலுவலகத்திற்கு வெகு சீக்கிரம் வருவதாகக் கேள்விப்பட்டேன். இன்று அதை உறுதிப்படுத்தவே நான் சீக்கிரம் வந்தேன். அவன் எனக்கு முன்னதாகவே இங்கு இருந்தான். நான் இந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கும்போது என்னை அடிக்கடி பார்த்துக் கொண்டே இருந்தான். கொஞ்சம் அதிர்ச்சியுடன் காணப்பட்டான் சார்!" என்றான். "திவாகர் தினமும் மிகவும் சீக்கிரம் வந்து ஏதோ கோப்புகளை எடுத்து அதை நகல் எடுப்பதாக ஒரு தகவல் சார்!" என்று முடித்தான். "இந்த ரகசியம் நமக்குள் இருக்கட்டும் ராஜேஷ்" என்று அவனை அனுப்பிவிட்டு, அவசரமாகக் கைபேசியை எடுத்து யாரிடமோ பேசினார். அன்று மாலை அனைவரும் சென்ற பிறகு ராஜேஷ் மானேஜர் அறைக்குச் சென்று அவரிடம், "சார் நான் வாட்ச்மேன் முருகனிடம் விசாரித்தேன். அவன் என்னிடம், அடிக்கடி ஒருவர் காலையில் சீக்கிரமே வந்து திவாகருக்காகக் காத்திருப்பதாகவும், பின்பு அவரிடம் திவாகர் ஏதோ ஒரு கடிதத்தைக் கொடுப்பதாகவும் அவரும் பதிலுக்கு ஒரு கடிதத்தைத் திவாகரிடம் தருவதாகவும் கூறினான்" என்றான். அனைத்தையும் கேட்டுக்கொண்ட மேனேஜர் "சரி நீங்கள் போகலாம்" என்றார்.

மறுநாள் ராஜேஷ் வழக்கம்போல அலுவலகத்திற்குச் சென்றான். அப்போது மேனேஜர் அறையில் அவருடன் திவாகர் நின்று கொண்டே பேசிக் கொண்டிருந்தான். மேனேஜரின் கையில் ஏதோ சில காகிதங்கள் இருந்தன. ராஜேஷ் மனதிற்குள் ஏதோ ஒரு பெரிய விஷயம் நடக்கப் போகிறது, திவாகர் வசமாகச் சிக்கிக் கொண்டான் என்று நினைத்தான். சிறிது நேரத்தில் கம்பெனியின் இயக்குனர் திரு பரமானந்தம் வேகமாக வந்தார். உடனே மேனேஜர் எழுந்து அவரை வணங்கினார். பின்பு மூவரும் ஏதோ பேசிக் கொண்டனர். சுமார் அரை மணி நேரம் கழித்து மேனேஜர் ராஜேஷை போனில் அழைத்தார். ராஜேஷ் உள்ளே சென்றதும் நிர்வாக இயக்குனர் சற்று குரலை உயர்த்தி ராஜேஷைப் பார்த்து "நீ இந்தக் கம்பெனியில் எவ்வளவு வருடங்களாக வேலை செய்கிறாய்? உனக்கு வெட்கமாக இல்லை, எப்படி உனக்கு இவ்வாறு துரோகம் செய்ய மனம் வந்தது?" என்று கேட்டார். ராஜேஷ் சற்று அதிர்ச்சி அடைந்து, ஒன்றும் தெரியாதது போல "என்ன சார் நடந்தது" என்றவுடன், "நீ நடிப்பதை முதலில் நிறுத்து. எங்களுக்கு எல்லாம் தெரிந்துவிட்டது . அனைத்திற்கும்



More papers at www.testpapersfree.com

ஆதாரம் இருக்கிறது. இனியும் மறுத்தால் நான் காவல்துறைக்குத் தகவல் கொடுத்துவிடுவேன். நான் இந்த வருடம் உனக்குப் பதவி உயர்வு அளித்துச் சம்பளத்தையும் அதிகமாக்கலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால், உன் பேராசை சரியாக மாட்டிக்கொண்டாய். எங்களுக்குச் சந்தேகம் வந்தவுடன் நான் இதைக் கண்டு பிடிக்க வேண்டுமெனத் திவாகரிடம் கேட்டுக்கொண்டேன். ஆனால் அவரை இதில் சிக்க வைக்க நீ நினைத்தாய். திவாகர் அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்து முடித்தார். அதனால்தான் அவர் காலையில் சீக்கிரம் உனக்கு முன்னால் அலுவலகத்திற்கு வந்து சில நாட்களாக உன்னைக் கவனிக்கத் தொடங்கினார். நமது கம்பெனி ரகசியங்களை எல்லாம் நகல் எடுத்து அடுத்தவருக்குக் கொடுத்து நமக்கு வர வேண்டிய ஆர்டர்களை வரவிடாமல் செய்ததைக் கண்டு பிடித்துவிட்டோம். வாட்ச்மேன் முருகனையும் இதற்காகப் பயன்படுத்தினோம். உண்மையில் நீதான் அந்த 'டெண்டர்' நகல்களை வெளியில் கொடுத்துப் பணம் பெற்றுக் கொண்டாய் என்பதை அறிய முடிந்தது. அவர்கள் நாம் குறிப்பிட்ட தொகையைவிடச் சற்றே குறைவாகக் குறிப்பிட்டதால் பல லட்சங்களை நாங்கள் இழக்க வேண்டி இருந்தது. ஆனால் நீ அந்தக் காரியத்தைத் திவாகர் செய்வது போலத் திசை திருப்பினாய். ஆனால், நாங்கள் விரித்த வலையில் நீ வசமாகச் சிக்கி விட்டாய். வாட்ச்மேன் முருகன் எங்களுக்கு அவ்வப்போது தகவல் தந்தார். உடனடியாக நீ ராஜினாமா கடிதத்தை அளித்துவிட்டு வெளியில் போ. எனினும் உனக்குத் தண்டனையாகச் சேர வேண்டிய அனைத்து தொகையையும் நிறுத்தச் சொல்லிவிட்டேன்" என்றார். ராஜேஷ் பேரதிர்ச்சி அடைந்தான். வேறு வழியின்றித் தனது ராஜினாமா கடிதத்தைச் சமர்ப்பித்தான். துரோக மனம் கொண்டவர்களுக்கு ராஜேஷ் வாழ்க்கை ஒரு பாடமாக அமைகிறது. வாழ்க்கையில் பொறுமையும் உழைப்பும் இருந்தால் மட்டுமே மனதில் நிம்மதியும் திருப்தியும் நிலைத்து இருக்கும்.

பின்னிணைப்பு 2

## இயற்கை !

அழகிய மயிலே! அழகிய மயிலே
அஞ்சுகம் கொஞ்ச, அமுத கீதம்
கருங் குயிலிருந்து விருந்து செய்யக்,
கடிமலர் வண்டுகள் நெடிது பாடத்,
தென்றல் உலவச், சிலிர்க்கும் சோலையில்
அடியெடுத்தூன்றி அங்கம் புளகித்து
ஆடுகின்றாய் அழகிய மயிலே!



More papers at www.testpapersfree.com

உனது தோகை புனையாச் சித்திரம்
ஒளிசேர் நவமணிக் களஞ்சியம் அதுவாம்!

உள்ளக் களிப்பின் ஒளியின் கற்றை
உச்சியில் கொண்டையாய் உயர்ந்ததோ என்னவோ!

ஆடுகின்றாய்; அலகின் நுனியில்
வைத்தஉன் பார்வை மறுபுறம் சிமிழ்ப்பாய்!
சாயல் உன் தனிகொத்து! ஸபாஷ்! கரகோஷம்!

ஆயிரம் ஆயிரம் அம்பொற்காசுகள்
ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின் வண்ணத் தடாகம்
ஆன உன் மெல்லுடல், ஆடல், உள்உயிர்,
இவைகள் என்னை எடுத்துப் போயின!
இப்போது, 'என நினைவு' என்னும் உலகில்
மீண்டேன். உனக்கோர் விஷயம் சொல்வேன்;
நீயும் பெண்களும் 'நிகர்' என்கின்றார்!
நிசம் அது! நிசம்! நிசம்! -- நிசமே யாயினும்
பிறர்பழித் தூற்றும் பெண்கள் இப் பெண்கள்!
அவர்கழுத்து உன்கழுத் தாகுமோ சொல்வாய்!
அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்பதற்கே
இயற்கை அன்னை, இப்பெண் கட்கெலாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கோ,
கறையொன் றில்லாக் கலாப மயிலே,
நிமிர்ந்து நிற்க நீள்கழுத்து அளித்தாள்!
இங்குவா! உன்னிடம் இன்னதைச் சொன்னேன்;
மனதில் போட்டுவை; மகளிர் கூட்டம்
என்னை ஏசும் என்பதற்காக!

புவிக்கொன் றுரைப்பேன்; புருஷர் கூட்டம்,
பெண்களை ஆதிப் பெருநாள் தொடங்கி
திருந்தா வகையிற் செலுத்தலால், அவர்கள்
சுருங்கிய உள்ளம் விரிந்தபாடில்லையே!



More papers at www.testpapersfree.com

- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்



More papers at www.testpapersfree.com